**தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 326 – சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான வருமானமல்லாத பெறுவனவுகளின் கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பௌதீக சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட ரூபா 86,850 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட வருமானமாக காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் ஏனைய வருமானத் தலைப்புகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட வருமானத்தில் அந்தத் தொகையை திணைக்களம் சேர்த்திருந்தது. | இந்தத் திணைக்களம் வருமானக் கணக்கொன்றைப் பேணியிருக்காததால் ஏனைய வருமான தலைப்புகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட வருமானத்தின் கீழ் பொருட்களை அகற்றுவதிலிருந்தான பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. | குறித்த தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாகக் காட்டப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிற்கான கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட பொருட்களின் விலைகள் நிலையான வைப்புக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை எனவே, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் அவற்றின் ஒதுக்க பெறுமதி ஆகியவை நிதி நிலைமை கூற்றில் சரியாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்தத் திணைக்களத்தின் தலைமை/ பிராந்திய அல்லது மாகாண அலுவலகங்களில் உள்ள அனைத்து நிலையான சொத்துக்களும் சிகாஸ் மென்பொருளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டில் அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் எதுவும் சிகாஸ் மென்பொருளில் சேர்க்கப்பட்டிருக்காததால், அந்தப் பொருட்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. தற்போது, அனைத்து சொத்துக்களும் படிப்படியாக சிகாஸ் மென்பொருளில் பதியப்பட்டு வருகிறதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் பதியப்பட வேண்டும். |
| (ii) | SA-80 திறைசேரி அச்சீட்டுத்தாள் மற்றும் மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (ACA-6) குறிப்பிடப்பட்டுள்ள கொள்வனவுகள் ஆகியவற்றின் பிரகாரம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளில் ரூபா 9,200,863 வேறுபாடு காணப்பட்டது. அதற்கான காரணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இதுபோன்ற குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் பதியப்பட வேண்டும். |
| (iii) | திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் உள்ள நிலையான சொத்துக்கள் பற்றிய தகவல்கள் சிகாஸ் மென்பொருளில் பதிவுசெய்யப்பட்டிருக்காததால், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மற்றும் அவற்றின் சரியான ஒதுக்க பெறுமதி என்பன நிதி | சிகாஸ் மென்பொருளில் இல்லாத இந்தத் திணைக்களத்தின் நிலையான சொத்துக்கள் அனைத்தும் சிகாஸ் மென்பொருளில் பதிவுசெய்யப்பட்டு வருகிறதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் பதியப்பட வேண்டும். |

நிலைமை கூற்றில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) புததகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேட்டை திணைக்களம் பேணியிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உள்ளுர் பிரயாணச் செலவினங்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 18,000,000 மற்றும் ரூபா 3,000,000 நிதியேற்பாடுகளிற்கு மேலதிகமாக ரூபா 7,500,000 மற்றும் ரூபா 850,000 தொகையான குறைநிரப்பு நிதியேற்பாடு குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்டிருந்தது. எனினும், குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டவாறான நிதியேற்பாட்டில் 113 சதவீதம் மற்றும் 118 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முறையே ரூபா 8,505,447 மற்றும் ரூபா 1,002,287 தொகைகள் சேமிக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டுக்காக மதிப்பிடப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் பிரயாணச் செலவினங்களைக் கோரியிருக்காதமை, ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்கான பிரயாண உறுதிச்சீட்டுக்கள் பல கொடுப்பனவிற்காக முன்வைக்கப்பட்டிருக்காதமை மற்றும் நிர்மாணங்கள் மற்றும் கட்டிடங்களின் கீழ் பெறப்பட்ட நிதியேற்பாடு அம்பாந்தோட்டையில் உள்ள சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் அலுவலக மேற்கூரையை திருத்தம் செய்வதற்காக தங்காலை மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கு கேள்விகள் கோரப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிறுவனம் கேள்விகளை சமர்ப்பித்திருக்காததால் ஆண்டின் போது அவ் வேலைகளை மேற்கொள்ளத் தவறியமை போன்ற காரணங்களால் சேமிப்புக்கள் ஏற்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | கவனமாக ஆய்வு செய்து மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய படிகள் மற்றும் காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகளின் செலவின விடயங்களிற்காக வருடாந்த மதிப்பீடுகள் மூலம் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக முறையே ரூபா 3,000,000 மற்றும் ரூபா 1,500,000 தொகைகள் நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் | காகிதாதிகளுக்கு மேலதிக நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் வழங்கப்பட்ட கட்டுநிதிகள் போதாததால் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, அந்த நிதியேற்பாடுகள் செலவின விடயம் 1201 இன் கீழ் சேமிக்கப்பட்டிருந்ததென தெரிவிக்கப்பட்டது. | கவனமாக ஆய்வு செய்து மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களில் முறையே 59 சதவீதம் மற்றும் 28 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,759,144 மற்றும் ரூபா 420,059 தொகைகள் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டுள்ளன. | | |
| (இ) | 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையின் 03 (XVII) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டின் போது செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில், சேமிப்புக்கள் ஏதேனும் இருந்தால், ஆண்டின் இறுதிக்கு முன்னர் ஏனைய செலவினங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. எனினும், 05 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,260,000 நிதியேற்பாடு மற்றும் மீளாய்வாண்டில் மூலதன செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடு என்பன நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. | செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதாமை, முழுமையாக நிதியேற்பாடு பெறப்படாமை, பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 2023 ஆம் ஆண்டிற்காக நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமை மற்றும் திணைக்களத்தின் செயற்பாடுகளை பேணுவது தொடர்பான காகிதாதிகள் மற்றும் அலுவலக விவகாரங்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான திணைக்களத்தின் நிதியேற்பாடு போதியளவு இல்லாமை போன்ற காரணங்களால் செலவின விடயங்களுக்கு இடையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்று மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காத ரூபா 212,835 பெறுமதியான பொறுப்புக்கள் 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 115 மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்கள் காணப்பட்டன. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அந்த அலுவலகங்கள் மூலம் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட சில விலைப்பட்டியல்கள் பெறப்படாததால், அந்த பொறுப்புக்களை பொறுப்புக்கள் பதிவேடு மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் சேர்க்க முடியாதிருந்தது; மேலும் சரியாகச் செய்வது நடைமுறையில் கடினமானதாகும். | ஆண்டுக்கான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே, இவ்வாறான சம்பவங்களை குறைப்பதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்களிற்கு பொறுப்பாக உள்ள போதிலும் அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக கண்காணிப்பதற்கு காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் அதன் மேற்பார்வை ஆகியவை கணக்காளரால் செய்யப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் முறைமையின் செயற்திறனை மீளாய்வு செய்வதற்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனவே, மீளாய்வு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க முடியவில்லை. உரிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் குறைந்தபட்ச உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் உரிய காலத்தில் நடாத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுளை முறையாக செயற்படுத்துவதற்காக அக்கபூர்வமான முறைமையொன்று காணப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு பொது நிர்வாக அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளதென தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | | | | |
| 447(1) | - | வாக்குப்பண பேரேட்டின் பொதுப் படிவம் 138 இல் ஏற்பட்ட பொறுப்புக்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 447(4) மற்றும் (5) | - | அனைத்து பொறுப்புக்களும் ஏற்பட்டவுடன் கணக்கின் இடது பக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கைகள்** | | | | |
| 2010 யூலை 09 ஆம் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க | | சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு பிரயாயணங்கள் தொடர்பான | அந்த உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும், அறிக்கைகள் | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை மற்றும் 1993 திசெம்பர் 31 ஆம் திகதிய பிபிஏ/6/1/1 ஆம் இலக்க சுற்றறிக்கை | அறிக்கைகளை நான்கு உத்தியோகத்தர்கள் வழங்கியிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டவுடன், அத்தகைய அறிக்கைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |

**(iii) பொது நிர்வாக சுற்றறிக்கை**

| | | | |
|---|---|---|---|
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (i) ஆம் பந்தி. | திணைக்களத்தின் முழு பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், ஆனால் அது அவ்வாறு செய்யப்படவில்லை. | சிரேஷ்ட சமூக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்களுக்கு உடன்படிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும், 02/2018(1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6(i) ஆம் பந்தி | ஒவ்வொரு பதவியணி உறுப்பினருக்கும் மனித வளத் திட்டத்தில் வருடாந்தம் குறைந்தபட்சம் 12 மணித்தியாலம் பயிற்சி வாய்ப்பு குறிப்பிடப்பட வேண்டும். எனினும், அத்தகைய பயிற்சித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | மனித வளத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும், அனைத்து உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கி வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் போதிய நிதியேற்பாடுகள் இல்லாத காரணத்தினால் பயிற்சிகளை வழங்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(iv) அரச நிதி சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய | தொடர்ந்துவரும் ஆண்டுக்கான மீண்டெழும் மற்றும் | தொடர்ந்துவரும் ஆண்டின் மீண்டெழும் நிகழ்ச்சித்திட்டங்களை | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| 02/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் நடைமுறை ஆண்டின் திசெம்பர் 10 இற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், 2023 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் மூலதன நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டு, 2022 திசெம்பர் 30 இல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | அமுல்ப்படுத்துவது தொடர்பான பெறுகைத் திட்டத்தை தயாரிப்பது நடைமுறையில் காணப்படவில்லை, மேலும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. 2022 திசெம்பர் 20 இல் நீதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது என்றும் அதன் பிரகாரம் இந்த ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(v) அரச கணக்குகளின் வழிகாட்டல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் வழிகாட்டியின் 06 ஆம் பந்தி. | வழிகாட்டல்களின் பிரகாரம் அறிக்கையிடும் நிறுவனத்தின் அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் இல்லாத பட்சத்தில் வெற்று அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும், ஆனால் நட்டங்கள் மற்றும் விடுபட்டவை பற்றிய கூற்று, புத்தகங்களில் இருந்தான பதிவழிப்புக்கள் கூற்று மற்றும் தவறவிடப்பட்ட உறுதிச்சீட்டுக்கள் கூற்று தொடர்பாக நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வெற்று அறிக்கையை | காலக்கிரமத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகளின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களம் வழங்கியிருக்கவில்லை . | | |
| 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3 பந்தி | அனைத்து அறிக்கையிடும் நிறுவனங்களும் அனைத்து வைப்புக்களுக்கான கணக்கிணக்கக் கூற்றைத் தயாரித்து, 2024 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் சமர்ப்பிக்க வேண்டும். எனினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகளின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.5 முற்பண வழங்கலும் தீர்ப்பனவும்**

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(2) ஆகியவற்றின் பிரகாரம் செயல்நிமித்த உபகட்டுநிதிகள் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கம் பூர்த்தியடைந்தவுடன், பதவிநிலை உத்தியோகத்தரால் விரைவாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் 07 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட உப-கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு 16-86 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. | காலக்கிரமத்தில் இதுபோன்ற சம்பவங்கள் தவிர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தை சரியாக மதிப்பீடு செய்யாமல் முற்பணங்கள் வழங்கப்பட்டதால், 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட | மதிப்பிடப்பட்ட தொகையின் கூட்டுமொத்தம் செலவிடப்பட்டிருக்காதமை, அத்தியாவசிய செலவினங்கள் மாத்திரமே | குறித்துரைத்த நோக்கத்தை முறையாக மதிப்பீடு செய்த பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| | செயல்நிமித்த கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்தல் சதவீதம் 36 - 54 சதவீதம் வரை இருந்தது. | மேற்கொள்ளப்பட்டுள்ளமை, முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் எதிர்பார்த்த அளவு உத்தியோகத்தர்கள் பங்கேற்காதமை போன்ற காரணங்களால் கட்டுநிதியில் சேமிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | கட்டுநிதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(5) ஆகியவற்றின் பிரகாரம் வெளியிடப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 06 கிளைகள் தொடர்பான ரூபா 24,840 பெறுமதியான காசு கட்டுநிதிகள் 2024 பெப்ரவரி 15 இல் திணைக்களத்தால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | 100 க்கும் மேற்பட்ட மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்கள் இருப்பதால், கணக்கீட்டு செயன்முறை தொடர்பான சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக, தொடர்புடைய ஆண்டின் சனவரி 01 முதல் நவம்பர் 30 வரையிலான காலப்பகுதிக்கான உறுதிச்சீட்டுக்களை திசெம்பர் 05 அளவில் அனுப்பப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள அதேநேரம் திசெம்பர் மாத விலைப்பட்டியல்கள் தொடர்ந்துவரும் ஆண்டின் சனவரியில் அனுப்பப்படும். எனினும், 2024 ஆம் ஆண்டிற்கான பிராந்திய அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் 2024.02.01 முதல் நடைமுறைக்கு வந்ததன் காரணமாக சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் பெப்ரவரியில் கட்டுநிதிகளின் வழங்கல் மற்றும் தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பாறையில் உள்ள திணைக்களத்தின் அலுவலகத்தை திருத்தம் செய்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 900,000 தொகை | குறித்த திருத்தம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், உடுகம மற்றும் கெபித்திகொல்லேவ ஆகிய 02 | திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அலுவலகங்களில் திருத்தப்பணிகள் அவசரமானதாக இருந்ததுடன் முன்னுரிமை தேவைப்பட்டது. எனவே, அதில் குறித்த நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் தலைமை அலுவலகத்திற்கான கைவிரல் அடையாள இயந்திரம், நகல் பிரதிசெய்யும் இயந்திரம் மற்றும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,980,000 தொகையை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் மாகாண/ பிராந்திய அலுவலகங்களுக்கு அத்தியாவசிய தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 தொகையான நிதியேற்பாடு போதுமானதாக இல்லாததால் ரூபா 1.9 மில்லியனிற்கு செலவின விடய இல. 2103 இன் கீழ் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் வகையில், நீதிமன்றங்கள் தொடர்பான சட்டச் சிக்கல்கள் மற்றும் விடயங்களைப் பார்ப்பதற்காக நியமிக்கப்பட்ட பணிக்குழு, சமுதாய அடிப்படை சீர்திருத்த செயன்முறையை ஒரு முக்கிய மாற்றுவழியாக இனங்கண்டுள்ளது. 09 மாகாணங்களில் உள்ள நீதவான் நீதிமன்றங்களில் நிறுவப்பட்டுள்ள திணைக்களத்தின் 49 அலுவலகங்களில் இடப்பற்றாக்குறை காரணமாக சமுதாய அடிப்படை சீர்திருத்தங்களை செயற்திறனாக அமுல்படுத்தும் செயற்பாடு தடைப்பட்டுள்ளது. | பல பிராந்திய அலுவலகங்களுக்கு போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குவதற்கு நீதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | சமுதாய அடிப்படை சீர்திருத்தச் செயற்பாட்டிற்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு அவர்களது கடமைகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாமல் போதிய இடவசதியும் அலுவலக வசதிகளும் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2022 ஏப்ரல் 04 ஆம் திகதிய சமுதாய அடிப்படை சீர்திருத்த ஆணையாளரின் டிசீபீசீ/ஈஎஸ்ரீ/04 ஆம் இலக்க கடிதம் மூலம் நீதி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது, ஆனால் அது தொடர்பாக கணிசமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தச் செயற்பாட்டின் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக ஆண்டின் போது 15 கள பரீட்சிப்புக்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது, ஆனால் ஆண்டின் போது 47 சதவீதத்திற்கு சமமான அத்தகைய 07 பரீட்சிப்புக்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. | திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்கள் காரணமாக முழு செயன்முறைக்கும் ஆணையாளர் தானே பொறுப்பாவார். எனவே, 07 கள பரீட்சிப்புக்கள் மாத்திரமே மும்முரங்கள் மற்றும் வரம்புகளுக்கு மத்தியில் நடாத்தப்பட்டிருந்ததென தெரிவிக்கப்பட்டது. | திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆண்டின் போது சமுதாய அடிப்படையிலான சீர்திருத்தங்களை ஊக்குவிக்கும் வகையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு 105 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 51 சதவீதத்திற்கு சமமான 54 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்திலும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படும் என்று திட்டமிட்டு, 105 நிகழ்ச்சித்திட்டங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டிருந்தன. எனினும், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களின் அதிகாரப் பகுதிகளில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பதற்கு உரிய அதிகாரிகளை தொடர்பு கொள்ளத் தவறியதன் காரணமாக எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. | திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நிதிகள் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றமடையாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டுக்கான சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் கீழ் நீதி அமைச்சு புத்தளம் நீதிமன்றத்தில் | 2010 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகள், ஒப்பந்தம் வழங்குதல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் போன்ற குறித்த கட்டிடம் தொடர்பான அனைத்து | நிர்மாணப் பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| உள்ள திணைக்களத்தின் கட்டிட நிர்மாணப் பணிகள் தொடர்பாக ரூபா 1,009,934 தொகையை செலவிட்டிருந்த போதிலும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளையும் நீதி அமைச்சு செய்துள்ளது. இதன் ஒரு பகுதி நிர்மாணம் பாதியில் நிறுத்தப்பட்டு, விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது என எழுத்து மூலம் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை எந்த பதிலும் வழங்கப்பட்டிருக்காததால் அது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளருக்கு மீண்டும் அறிவிக்கப்படும். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 யூன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனமும் கொள்வனவு செய்த அல்லது அகற்றப்பட்ட கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 13,830 பெறுமதியான மின்சார உபபாகங்கள் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட பொருட்கள் பற்றிய தகவல்கள் கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மின்சார உருப்படிகள் 2023 மே மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 04 வது காலாண்டின் இறுதியில் கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் தவிர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைகள் தொடர்பான 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் | நீதி அமைச்சின் பிணைகள் தொடர்பான பிரிவிடமிருந்து உரிய படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன், உரிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் மற்றும் படிவங்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதியான உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பொது நிதிகளின் கட்டுக்காப்பு மற்றும் பாதுகாப்பிற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பானவராவர். எனவே, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் பிணைகள் வழங்குவதை அவர் உறுதிப்படுத்த வேண்டும். எனினும், நிதிப்பிரமாணம் 315 இன் பிரகாரம் பிணைகளை வழங்க வேண்டிய கணக்காளர், காசாளர் மற்றும் களஞ்சிய காப்பாளர் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் பிணைகளை வழங்கியிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்பட்டு, அந்த ஆவணங்கள் நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தளம் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அறையொன்றில் பேணப்பட்டு வரும் சமுதாய அடிப்படை சீர்திருத்தங்கள் திணைக்களத்தின் அலுவலகத்தில் 2022 யூன் 30 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தினால், ரூபா 163,302 கிரயமான அலுவலக உபகரணங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டது. எனினும், 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நட்டங்கள் மற்றும் விடுபட்டவைகள் தொடர்பான கூற்றில் அது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள 06 வகையான அலுவலக உபகரணங்களை பதிவழிப்பதற்கு நீதி அமைச்சின் செயலாளரிடம் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் குறித்த சம்பவம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் தீர்மானத்தை வழங்க முடியாது என அவரால் தெரிவிக்கப்பட்டது. எனவே, அழிக்கப்பட்ட பொருட்கள் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் தேவையான தகவல்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் புறப்படுதல்களை மேற்பார்வை செய்யும் வகையில், 97 கைவிரல் அடையாள இயந்திரங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள பிராந்திய அலுவலகங்களில் 2018 | திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் நிறுவப்பட்டுள்ள கைவிரல் அடையாள இயந்திரங்களை தலைமை அலுவலகத்துடன் மையப்படுத்துவது தற்போது செய்யப்படுகிறது; மற்றும் 96 கைவிரல் அடையாள | கைவிரல் அடையாள இயந்திரங்களை நிறுவுவதில் இருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டில் ரூபா 2,889,145 தொகை செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்தன. அந்த இயந்திரங்கள் தற்காலிக மின்சுற்றுக்களுடன் பல பிராந்திய அலுவலகங்களில் நிறுவப்பட்டு குறைந்தபட்ச வசதிகளுடன் சிறிய அறைகளில் பேணப்பட்டு வருகின்றன. தலைமை அலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் அனைத்து பிராந்திய அலுவலகங்கள் தொடர்பான தகவல் பெறப்படும் தகவல் முறைமை மீளாய்வாண்டிலும் மேம்படுத்தப்படாததால் கைவிரல் அடையாள இயந்திரங்களை நிறுவுவதில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்ற முடியவில்லை. | இயந்திரங்களில் 84 தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதன் பிரதிகள் தலைமை அலுவலகம் ஊடாக திணைக்களத்தின் உயர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புத்தளம் நீதிமன்றத்தில் சமுதாய அடிப்படை சீர்திருத்த அலுவலகத்தை நிர்மாணிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நீதிமன்ற வளாகத்தில் உள்ள 11*11 அடி அளவிலான சிறிய அறையில் சமுதாய அடிப்படை சீர்திருத்தங்களில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களால் குற்றவாளிகளுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் ஏனைய அலுவலக நடவடிக்கைகள் பல சிரமங்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2022 யூன் 21 இல் ஏற்பட்ட தீயினால் கணனி, நகல் பிரதியிடுதல் இயந்திரம், கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் முற்றாக அழிந்து போயிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் திணைக்களத்தினால் அது தொடர்பில் விசாரணைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த 06 அலுவலக உபகரண உருப்படிகளை பதிவழிப்பதற்கு மீண்டும் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை மற்றும் விரிவான விசாரணை அறிக்கையுடன், அழிக்கப்பட்ட உருப்படிகளை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நீதி அமைச்சின் செயலாளரிடம் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. எனினும், புத்தளத்தில் உள்ள அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகிறதால் வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் வரையில் அது தொடர்பில் தீர்மானிக்க முடியாது என நீதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். | விசாரணை நடாத்தப்பட்டு, பொறுப்பான உத்தியோகத்தர்களை அடையாளம் காண வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இடிந்த அலுவலகத்திற்காக தற்காலிக இடத்தைக் கண்டுபிடிப்பதற்கோ அல்லது பாதியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கோ திணைக்களம் மீளாய்வாண்டில் நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் முன்மொழிவுகள் மற்றும் தீர்மானத்தின் அடிப்படையில், புத்தளத்தில் சமுதாய அடிப்படை சீர்திருத்த அலுவலகத்தை நிறுவுவதற்கு கட்டிடம் ஒன்றை வழங்குமாறு நீதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாக ஒரு இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டியது அல்லது நிர்மாணங்களை பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளுதல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலையான அபிவிருத்தி இலக்கை இனங்கண்டிருந்த திணைக்களம், அந்த இலக்கை அடைந்துகொள்வதற்காக 03 முக்கிய இலக்குகளை தயாரித்திருந்தது. சமுதாய அடிப்படை சீர்திருத்தங்களுக்கு அனுப்பப்பட்டவர்களில் 40 சதவீதத்தினரை நல்லவர்களாக மாற்றும் இலக்கின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது, ஆனால் அதன் முன்னேற்றம் 45 சதவீதமாகவே இருந்தது. போதைக்கு அடிமையானவர்களில் 35-40 சதவீதத்தினரை சிகிச்சைகள் மூலம் விடுவிப்பது இலக்காக இருந்த போதிலும் முன்னேற்றம் 40 சதவீதமாகவே இருந்தது. சமுதாய அடிப்படை சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட நபர்களை அவர்களின் சமூக நலனைக் கருத்தில் கொண்டு சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியில் மேம்படுத்துவதே நோக்கமாக இருந்த போதிலும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான இலக்குகளில், மூன்றாவது இலக்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும், செயலாற்றல் குறிகாட்டிகள் 2024 ஆம் ஆண்டிலிருந்து இனங்காணப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் முன்னேற்றத்தை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(i) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் உள்ளக கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டிருக்காததால் உள்ளக கணக்காய்வு பிரிவை நிறுவ முடியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உற்பத்திச் சேவையைப் பேணுவது தொடர்பாக உரிய காலத்தில் மீளாய்வு செய்யத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் திணைக்களத்தில் பதவியணி நிலைகளில் 03 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையில் 20 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 26 வெற்றிடங்கள் மற்றும் முதன்மை நிலையில் 06 வெற்றிடங்கள் உள்ளடங்கிய 55 வெற்றிடங்கள் காணப்பட்டன. | சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர் பதவியில் ஒரு வருட சேவைக் காலம் இருந்த போதிலும் 05 வருட காலப்பகுதியினுள் சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியதன் காரணமாக சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் நியமனங்களை வழங்க முடியுமா என்பது குறித்து பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. உதவி/பிரதி ஆணையாளர் ஆகிய 03 பதவிகளில் ஒன்றுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது, ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் ஏனைய பதவிகளுக்கு போதுமான தகுதியான உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை. இலங்கை நிர்வாக சேவை, உள்ளக கணக்காய்வாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஆகிய பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எழுத்து மூலமும் மிஸ்கோ (misco) முறைமையின் ஊடாகவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | நோக்கத்தை அடைந்துகொள்ளும் போது திணைக்களத்தின் செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்கள செயற்பாடுகளின் படிநிலை வரிசையில் உள்ள தலைமை நிர்வாகப் பதவியான சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தரின் 10 பதவிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் அந்தப் பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு அல்லது பதவி உயர்வுகளை மேற்கொள்ளாமல் அந்த நிரந்தரப் பதவிகளில் உள்ள கடமைகளை மேவுகை செய்வதற்கு சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் சிரேஷ்ட சமுதாய அடிப்படை சீர்திருத்த உத்தியோகத்தர் பதவியின் தரம் 01 இல் 05 ஆண்டுகள் சேவைக் காலம் தேவைப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் 2022 ஆம் ஆண்டில் அந்தத் தகுதியைப் பெற்றிருந்தனர், ஆனால் 05 வருட காலத்திற்குள் சம்பள ஏற்றங்கள் கிடைக்கப்பெற்றிருக்காததால் நியமனங்களை வழங்க முடியுமா என பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கோரப்பட்டிருந்தது. எனவே அதில் 10 பதவிகளுக்கான நியமனங்களை மேற்கொள்ளுதல் தாமதமாகியது. | நோக்கத்தை அடைந்துகொள்ளும் போது திணைக்களத்தின் செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு உரிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |